2018 மே 29]

தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர் பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோர் முதல் கூட்டத்தை நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவது கூட்டத்தில், பெறப்பட்ட கருத்துருக்களை பரிசீலனை செய்ய வேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித் தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளவர்களின் கருத்துகளும் கேட்கப்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், பரிந்துரைகளின்மீது கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிருவாக இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். தேவைப்பட்டால் இயக்குநர் 3-வது கூட்டத்தையும் நடத்தலாம். இப்படியெல்லாம் வருகின்றபட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சட்டத்திற்குட்பட்டு, விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை* V.N. *ரவி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

கலைக் கல்லூரி

***5635—திரு. விருகை V.N. ரவி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2018 மே 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் மறந்து, தியாகச் சுடராய், தமிழக மக்களின் நலம் விரும்பியாய், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று அனுதினமும் தமிழக மக்களுக்காக வாழ்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணை விட்டு மறைந்தாலும், எங்கள் நெஞ் சங்களில் அணையா விளாக்காய் ஒளிர்ந்துகொண்டிருக்கும் தியாகச் சுடரே, காவேரியை மீட்டெடுத்த எங்கள் காவேரித் தாயே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சீரிய நல்லாட்சி நடத்திவரும், தமிழக மக்களின் அன்பைப் பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பண்புக்கு இலக்கணமாய் இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

விருகம்பாக்கம் தொகுதி பரந்து விரிந்த தொகுதியாகும். இது 3 இலட்சத்து 5 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதி. விருகம்பாக்கம் தொகுதியிலே அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி, சென்னை மேல்நிலைப் பள்ளி, தனியார் மேல்நிலைப் பள்ளிகள் என சுமார் 40-க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் உள்ளன. இந்தப் பள்ளிக்கூடங்களில் சுமார் 6 ஆயிரத்திலிருந்து 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் 12 ஆம் வகுப்பு படிக்கின்றார்கள். இதில் வசதி படைத்தவர்கள் 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் பேர் வரை இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களை தனியார் கல்லூரிகளில் சேர்க்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. ஆனால், வசதியில்லாத ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் அரசுக் கல்லூரிகளை நம்பி இருக்கின்றார்கள். அந்தவகையிலே, விருகம்பாக்கம் தொகுதிக்கு ஓர் அரசு கலைக் கல்லூரியைத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 மே 29]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியானது சென்னை மாவட்டத்திற்குட்பட்ட பகுதியிலே அமைந்து இருக்கிறது. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 14 அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளும், 18 சுயநிதி கலைக் கல்லூரிகளும் என 39 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அந்த வகையில் பார்க்கின்றபொழுது கடந்த 2017-2018 ஆம் கல்வி ஆண்டிலே 7 அரசு கலைக் கல்லூரிகளில் சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டதில், 1,485 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல் 14 அரசு நிதி உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017-2018 ஆம் ஆண்டிலே 2,510 சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகாமல் காலியாக இருக்கின்றன. அதேபோல் 18 சுயநிதிக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 5,010 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மேற்கண்ட விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

முற்பகல் 10-55

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைப் பொறுத்தவரை பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்கித் தந்த அரசு, அம்மா அவர்களின் அரசு. அந்த வகையிலே கேட்டதையும்,கேட்காததையும்,சொன்னதையும்,சொல்லாததையும் செய்கின்ற அரசு அம்மா அரசு. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வரும் நிதியாண்டிலாவது இதை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவங்குவதற்கு அரசு விதிமுறையின்படி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியாக இருந்தால், 2 ஏக்கர் நிலமும், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியாக இருந்தால், 3 ஏக்கர் நிலமும், கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பகுதியாக இருந்தால், 5 ஏக்கர் நிலமும் தேவைப்படுகின்ற அதேநேரத்தில் புதிய கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக 9 கோடியே 86 இலட்சத்து 84 ஆயிரத்து 300 ரூபாயும், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஓராண்டிற்கு ஊதியமாக 2 கோடியே 89 இலட்சத்து 66 ஆயிரத்து 143 ரூபாய் என்றும், ஒட்டுமொத்தமாக ஒரு கல்லூரி புதியதாக தொடங்குவதற்கு ரூபாய் 12 கோடியே 77 இலட்சம் தேவைப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருகம்பாக்கம் தொகுதியிலே ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்து கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, விருகம்பாக்கம் தொகுதியிலே ஒரு புதிய கலைக் கல்லூரி தொடங்குவது குறித்து தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா வழி தொடரும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டு காலமாக நத்தம் தொகுதியிலே ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை நான் கேள்வியைக் கேட்டிருக்கின்றேன். இந்த ஆண்டாவது நத்தம் தொகுதியிலே ஓர் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற நத்தம் சட்டமன்றத் தொகுதியானது திண்டுக்கல் மாவட்டத்திலே அமைந்திருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்திலே அரசுக் கல்லூரிகள்*

2018 மே 29]

இரண்டும், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மூன்றும், சுயநிதிக் கல்லூரிகள் 16-ம், பல்கலைக்கழகத்தினுடைய அரசு உறுப்புக் கல்லூரிகள் இரண்டும் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுடைய சேர்க்கைக்கேற்ப கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. கடந்த 2 ஆண்டுகளாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் தொடர்கின்ற இந்த அரசு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் அதிக அளவில் சேருகின்ற காரணத்தால் கூடுதலாக அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகித மாணவர்களின் சேர்க்கைக்கும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலே 15 சதவிகித கூடுதல் சேர்க்கைக்கும், சுயநிதிக் கல்லூரிகளிலே 10 சதவிகித கூடுதல் சேர்க்கைக்கும் வழிவகை செய்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்று நினைக்கின்ற மாணவர்களுக்குத் தேவையான இடங்களைப் பூர்த்தி செய்து வருகிறது. அதுபோல, வரக்கூடிய காலகட்டங்களில் திண்டுக்கல் மாவட்டத்திலே ஆய்வு செய்து, தேவையிருப்பின் மாணவர்களின் சேர்க்கைக்குண்டான வசதிகளை அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

புதிய நியாய விலைக் கடை

***7551—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, 170-வது வார்டு, பூந்தமல்லி சாலையில் உள்ள அமுதம் பல்பொருள் அங்காடியை இரண்டாகப் பிரித்து, அச்சுதன் நகரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?